**திருவேல் அகாடமி**
***TNPSC Gr-2, 2A முதனிலை & முதன்மைத் தேர்வு – 2022***
**திருவண்ணாமலை**
***97901 46151 / 88707 60558 / 86673 31004***
**மாதிரித் தேர்வு - 7**

*{9 - 10 -வது தமிழ், பிப்ரவரி - 2022 மாத நடப்பு நிகழ்வு, Unit – 8 தமிழக வரலாறு, பண்பாடு, சமூக அரசியல் இயக்கங்கள் ( 6 - 12), புதிர்கள், டைஸ், விஷூவல் ரீசனிங், ஆல்பா எண் ரீசனிங், எண்வரிசை}*

1. இவர் கரிசல் எழுத்தாளர்கள் வரிசையில் மூத்தவர் என்று அறியப்படுபவர்.
A)கி.இராஜநாராயணன்
B)கு.அழகிரிசாமி
C)கி.வ.ஜானகிராமன்
D)அப்பாசாமி
E)விடை தெரியவில்லை

2. கைமுறை – இலக்கணக் குறிப்பு தருக.
A)வினைத்தொகைகள்
B)வேற்றுமைத் தொகை
C)மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
D)தொகுத்தல் விகாரம்
E)விடை தெரியவில்லை

3. கூற்று : இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்தை வீரமாமுனிவர் சந்தாசாகிப் என்னும் திருச்சியை ஆண்ட மன்னருக்கு வழங்கினார்.
காரணம் : மன்னரின் எளிமையையும், துறவையும் கண்டு வியந்த முனிவர், மன்னருக்கு அப்பட்டத்தினை வழங்கினார்.
A)கூற்று தவறு காரணம் சரி
B)கூற்று சரி, காரணம் தவறு
C)கூற்று காரணம் இரண்டும் சரி
D)கூற்று காரணம் இரண்டும் தவறு
E)விடை தெரியவில்லை

4. செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொர்ந்திப் பொருளை விளக்குதல் என்பது _____ அணி.

A)தற்குறிப்பேற்ற அணி

B)முன்ன விலக்கு அணி

C)தீவக அணி

D)உருவக அணி

E)விடை தெரியவில்லை

5. பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

"அவம் பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்."

A)"அவன் பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கான். உங்ளுடைய ஊருக்கு அவனைக் கூட்டிக்கிட்டு."

B)"அவன் பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கிறான். உங்கள் ஊருக்கே அவனைக் கூட்டிக் கொண்டு வருவேன்."

C)"அவன் பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கிறான். உங்கள் ஊருக்கே அவனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்."

D)"அவனுடைய பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கிறான். உங்கள் ஊருக்கே அவனைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்."

E)விடை தெரியவில்லை

6. ஜெயகாந்தன் குறித்த தரவுகளில் பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

A)உன்னைப்போல் ஒருவன்

B)சில நேரங்களில் சில மனிதர்கள்

C)இமயத்துக்கு அப்பால்

D)எதற்காக எழுதுகிறேன்?

E)விடை தெரியவில்லை

7. கிறித்துவிற்குமுன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான். இவரை அருளப்பன் என்றும் குறிப்பிடுவர். இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி. வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இவருக்குக் _____ என்று பெயரிட்டுள்ளார்.

A)வீரையன்

B)கருணையன்

C)காலன்

D)கணிதன்

E)விடை தெரியவில்லை

8. கானடை என்பதைப் பிரித்து எழுதும்போது தவறான ஒன்றைத் தேர்வு செய்க.

A)கான் + அடை

B)கான் + நடை

C)கால் + நடை

D)கா + நடை

E)விடை தெரியவில்லை

9. பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

”நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது.”

A)”நீங்க சொன்ன இடத்தில்தான் அண்ணா! எதிர்ப்புறாத்தில் ஒரு தேநீர் கடை இருக்கிறாது.”

B)”நீ சொன்ன இடத்தில்தான் அண்ணா! எதிர்ப்புறத்தில் ஒரு தேநீர் கடை உள்ளது.”

C)”நீங்கள் சொன்ன இடத்தில்தான் அண்ண! எதிர்ப்புறத்தில் ஒரு கடை உள்ளது.”

D)”நீங்கள் சொன்ன இடத்தில்தான் அண்ணா! எதிர்ப்புறத்தில் ஒரு தேநீர் கடை இருக்கிறது.”

E)விடை தெரியவில்லை

10. Renaissance – என்பதற்கு இணையான தமிழ்ச்சொல்.

A)மெய்யியலாளர்

B)நம்பிக்கை

C)மீட்டுருவாக்கம்

D)மறுமலர்ச்சி

E)விடை தெரியவில்லை

11. தவறான ஒன்றைத் தேர்வு செய்க.

1.செப்பலோசை - இருவர் உரையாடுவது போன்ற ஓசை

2.அகவலோசை - சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை

3.துள்ளலோசை - கன்று துள்ளினாற்போலச் சீர்தோறுந் துள்ளிவரும் ஓசை

4. தூங்கலோசை - தாழ்ந்து உயர்ந்து வரும் ஓசை

A)1 மற்றும் 2 மட்டும் தவறு

B)2 மற்றும் 3 மட்டும் தவறு

C)3 மட்டும் தவறு

D)4 மட்டும் தவறு

E)விடை தெரியவில்லை

12. தரவுகளை கவனிக்க.

1.நாளுக்கு ஒருமுறை மலர்வது - சண்பகம்

2.ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது - பிரம்ம கமலம்

3.12 ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது - குறிஞ்சி

4.தலைமுறைக்கு ஒருமுறை மலர்வது - மூங்கில்

A)1 மற்றும் 3 மட்டும் தவறு

B)3 மற்றும் 4 மட்டும் சரி

C)அனைத்தும் தவறு

D)அனைத்தும் சரி

E)விடை தெரியவில்லை

13. 'சேரமான் காதலி' என்னும் நூலிற்காக சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.

A)முத்தையா

B)இராஜகோபாலாச்சாரி

C)அண்ணா

D)கலைஞர்

E)விடை தெரியவில்லை

14. பொருத்துக:

1. எண்ணும்மை — அ) கேள்வியினான்

2. வினைத்தொகை — ஆ) ஆடுக

3. வியங்கோள் வினைமுற்று — இ) வண்ணமும் சுண்ணமும்

4. வினையாலணையும் பெயர் — ஈ) பயில்தொழில்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | இ | ஆ | ஈ | அ |
| C) | இ | ஈ | ஆ | அ |
| D) | ஈ | இ | அ | ஆ |

E) விடை தெரியவில்லை

15. பிள்ளைத் தமிழ் பருவங்களின் சரியான வைப்பு முறையைத் தேர்வு செய்க.

A)காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், அம்புலி, வருகை

B)காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, வருகை, அம்புலி, முத்தம்

C)அம்புலி, காப்பு, சப்பாணி, செங்கீரை, தால், முத்தம், வருகை

D)காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி

E)விடை தெரியவில்லை

16. குமரகுருபரர் இயற்றிய நூல்களுள் தவறானதைத் தேர்வு செய்க.

A)கந்தர் கலிவெண்பா

B)மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்

C)மதுரைக்கலம்பகம்

D)மும்மணிக்கோவை

E)விடை தெரியவில்லை

17. குழந்தையின் தலை 5-6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும் பிள்ளைத் தமிழ் பருவம்.

A)காப்பு

B)செங்கீரை

C)தால்

D)முத்தம்

E)விடை தெரியவில்லை

18. பிறருக்கு உதவுதல் சிறந்த அறமாக _________ இலக்கியங்கள் காட்டுகின்றன.

A)பக்தி இலக்கியங்கள்

B)சங்க இலக்கியங்கள்

C)சிற்றிலக்கியங்கள்

D)காப்பியங்கள்

E)விடை தெரியவில்லை

19. 'மறுமை நோக்கி கொடுக்காதவன் பேகன்' என்றவர்,

A)ஔவையார்

B)நச்செள்ளையார்

C)பரணர்

D)பெருந்தலைச் சாத்தனார்

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 7

20. சரியான அகரவரிசையில் உள்ளதைத் தேர்வு செய்க.

A) உழவு, மண், ஏர், மாடு, காடு, மலை

B) உழவு, காடு, மலை, மண், மாடு, ஏர்

C) உழவு, ஏர், காடு, மண், மலை, மாடு

D) ஏர், உழவு, மண், காடு, மலை, மாடு

E) விடை தெரியவில்லை

21. மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற ________ பூவைச் சூடுவர்.

A) காஞ்சி

B) நொச்சி

C) உழிஞை

D) தும்பை

E) விடை தெரியவில்லை

22. ‘உழுபவருக்கே நில உரிமை இயக்கம்’ உடன் தொடர்புடையவர்.

A) சின்னப்பிள்ளை

B) கிருஷ்ணம்மாள்

C) எம்.எஸ்.சுப்புலட்சுமி

D) பாலசரஸ்வதி

E) விடை தெரியவில்லை

23. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் ____ மரபைச் சேர்ந்தவர்.

A) சேரர்

B) சோழர்

C) பாண்டியர்

D) பல்லவர்

E) விடை தெரியவில்லை

24. உலகத் தமிழ் மாநாடுகளைச் சரியான காலவரிசையில் பொருத்துக:

1. 1966 அ) யாழ்ப்பாணம்
2. 1968 ஆ) பாரீசு
3. 1970 இ) சென்னை
4. 1974 ஈ) கோலாலம்பூர்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | அ | ஈ | இ |
| B) | இ | ஆ | ஈ | அ |
| C) | ஆ | ஈ | அ | இ |
| D) | ஈ | இ | ஆ | அ |

E) விடை தெரியவில்லை

25. ______ என்பவர் திருக்குறளைப் பற்றிக் கூறும்போது "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலகத்திலேயே காண்பது அரிது" என்றார்.

A) ஜி.யு.போப்
B) ஆல்பர்ட் சுவைட்சர்
C) கால்டெவெல்
D) எல்லீஸ் பாதிரியார்
E) விடை தெரியவில்லை

26. மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார். - நேர் கூற்றாக மாற்றுக.

A) "நான் நாளை வீட்டுக்கு வருவேன்" என்று முரளி கூறினார்.
B) வீட்டுக்கு நாளை வருவதாக முரளி கூறினார்.
C) முரளி நாளை வீட்டுக்கு வருவதாக கூறினார்.
D) "நாளை நான் வீட்டுக்கு வருவேன்" என்று முரளி கூறினார்.
E) விடை தெரியவில்லை

27. ”தென்னாட்டு பெர்னாட்ஷா என்று அறிஞர் அண்ணாவைப் புகழ்கிறோம்” என்று ஆசிரியர் கூறினார். – அயற்கூற்றாக மாற்றுக.

A)”தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அண்ணா புகழ்வதாக ஆசிரியர் கூறினார்.”

B)தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அண்ணா புகழப்படுவதாக ஆசிரியர் கூறினார்.

C)அண்ணா தென்னாட்டு பெர்னாட்ஷா என்று புகழப்படுவதாக ஆசிரியர் கூறுனார்.

D)ஆசிரியர் தென்னாட்டு பெர்னாட்ஷா என்று அண்ணா புகழப்படுவதாக கூறினார்.

E)விடை தெரியவில்லை

28. மார்னிங் நாஷ்டாவுக்கு இரண்டு தோசைகள் ஹோட்டலில் சப்பிடப்பட்டான். – பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குக.

A)காலை சிற்றுண்டியான் இரண்டு தோசைகளை சாப்பிட்டான்.

B)காலை உணவு இரண்டு தோசைகளை உணவு சிற்றுண்டியில் உண்டான்

C)காலை சிற்றுண்டிக்கு இரண்டு தோசைகளை உணவு விடுதியில் உண்டான்.

D)காலை சிற்றுண்டிக்கு இரண்டு தோசைகளை உணவு விடுதியில் முடித்தான்.

E)விடை தெரியவில்லை

29. ”கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை” பயின்றுவந்துள்ள அணி.

A)உருவக அணி

B)பொருள் பின்வரு நிலையணி

C)சொற்பொருள் பின்வரு நிலையணி

D)உவமை அணி

E)விடை தெரியவில்லை

30. பொருத்துக:

1. ஆகாயத்துக்கு அடுத்த வீடு — அ) கி.வா.ஜ.
2. தமிழ்ப்பழமொழிகள் — ஆ) மு.மேத்தா
3. குடியரசு — இ) சுபாஷ் சந்திரபோஸ்
4. இந்திய தேசிய இராணுவம் — ஈ) பெரியார்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | அ | ஈ | இ |
| B) | அ | ஆ | ஈ | இ |
| C) | இ | அ | ஈ | ஆ |
| D) | இ | ஆ | ஈ | அ |

E) விடை தெரியவில்லை

31. சரியான இணையைத் தேர்வு செய்க.

A) புரிசை - இருக்கை
B) அணங்கு - தாவரம்
C) பணை - முரசு
D) கயம் - ஓவியம்
E) விடை தெரியவில்லை

32. செய்யுளிசை அளபெடையைக் கண்டறிக.

A) நிலைஇய
B) குழாஅத்து
C) நசைஇ
D) கெடுப்பதூஉம்
E) விடை தெரியவில்லை

33. கூற்று: குறுந்தொகைப் பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டவை. கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது.

காரணம் : 1915 ஆம் ஆண்டு சௌரிப்பெருமாள் அரங்கனார் முதன் முதலில் இந்நூலைப் பதிப்பித்தார்.

A)கூற்று காரணம் இரண்டும் சரி, மேலும் சரியாகப் பொருந்தியுள்ளது.

B)கூற்று காரணம் இரண்டும் தவறு, மேலும் பொருந்தவில்லை.

C)கூற்று மட்டும் சரி, காரணம் தவறு.

D)கூற்று மட்டும் தவறு, காரணம் சரி.

E)விடை தெரியவில்லை

34. ஒரு சிறு இசை என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக இவருக்கு 2016 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்றவர்.

A)கல்யாண்ஜி

B)வாணிதாசன்

C)ந.காமராசன்

D)கு.ப.ரா.

E)விடை தெரியவில்லை

35. கீழ்காண்பவற்றுள் முற்றும்மை இலக்கணக்குறிப்புடன் தொடர்புடையது.

A)சரிந்து

B)உருண்டது

C)அனைவரும்

D)எண் எழுத்து

E)விடை தெரியவில்லை

36. அலரும் மயிலும், கூவும் ஆந்தையும், அகவும் சேவலும் போன்ற இயற்கையின் ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும். – ஒலி மரபுப் பிழைகளை நீக்கி எழுதப்பட்டுள்ளதை தேர்வு செய்க.

A)அகவும் மயிலும், அலறும் ஆந்தையும், கூவும் சேவலும் போன்ற இயற்கையின் ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்.

B)அலரும் மயிலும், அகவும் ஆந்தையும், கூவும் சேவலும் போன்ற இயற்கையின் ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்.

C)நடனமாடும் மயிலும், அகவும் ஆந்தையும், கூவும் சேவலும் போன்ற இயற்கையின் ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்.

D)அகவும் மயிலும், குழறும் ஆந்தையும், கூவும் சேவலும் போன்ற இயற்கையின் ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்.

E)விடை தெரியவில்லை.

37. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

விடை : பானையின் வெற்றிடமே நமக்கு பயன்படுகிறது.

A)பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

B)பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?

C)பானை எதனால் பயன்படுகிறது?

D)பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?

E)விடை தெரியவில்லை

38. கூற்று : பெரியார் உயிர் எழுத்துக்களில் ”ஐ” என்பதனை “அய்” எனவும், “ஔ” என்பதை “அவ்” எனவும் சீரமைத்தார்.

காரணம் : சில எழுத்துக்களைக் குறைப்பதன் வாயிலாக தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

A)கூற்று சரி, காரணம் தவறு

B)கூற்று காரணம் இரண்டும் சரி

C)கூற்று, காரணம் இரண்டும் தவறு

D)கூற்று தவறு, காரணம் சரி.

E)விடை தெரியவில்லை

39. பொருத்துக:

| | |
|---|---|
| 1. கு.அழகிரிசாமி | அ) முதலில் இரவு வரும் |
| 2. தி.ஜானகிராமன் | ஆ) அப்பாவின் சிநேகிதர் |
| 3. ஆதவன் | இ) சக்தி வைத்தியம் |
| 4. அசோகமித்ரன் | ஈ) அன்பளிப்பு |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஆ | ஈ | அ | இ |
| B) | ஈ | அ | இ | ஆ |
| C) | ஈ | இ | அ | ஆ |
| D) | இ | ஈ | அ | ஆ |

E) விடை தெரியவில்லை

40. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், என்னும் நூலின் ஆசிரியர்.

A) வல்லிக்கண்ணன்

B) ந.பிச்சமூர்த்தி

C) ந.முத்துக்குமார்

D) சுரதா

E) விடை தெரியவில்லை

41. 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' என்னும் பட்டம் யுனெஸ்கோ இவருக்கு வழங்கியுள்ளது.

A) அண்ணா

B) கலைஞர்

C) பெரியார்

D) டாக்டர். அம்பேத்கர்

E) விடை தெரியவில்லை

42. 'வானொலி கேட்டு மகிழ்ந்தனர்' ________ வகை ஆகுபெயர்.

A)காரணவாகுபெயர்

B)காரியவாகுபெயர்

C)கருவியாகுபெயர்

D)தொழிலாகுபெயர்

E)விடை தெரியவில்லை

43. கூற்று 1 : மதுரைக் காஞ்சி என்னும் பத்துபாட்டு நூல் 782 அடிகளைக் கொண்டது.

கூற்று 2 : அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன.

கூற்று 3 : இதைப் 'பெருகுவள மதுரைக்காஞ்சி' என்பர்.

கூற்று 4 : இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்றா பாண்டியன் நெடுஞ்செழியன். பாடியவர் மாங்குடி மருதனார்.

தவறான கூற்று / கூற்றுக்களைத் தேர்வு செய்க.

A)1, 2 மற்றும் 3 மட்டும் தவறு

B)1 மட்டும் தவறு

C)2, 3 மற்றும் 4 மட்டும் தவறு

D)ஏதுமில்லை

E)விடை தெரியவில்லை

44. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

A)கொல்யானை

B)குவிமொட்டு

C)இமிழிசை

D)மா கால்

E)விடை தெரியவில்லை

45. சீவக சிந்தாமணி குறித்த கூற்றுக்களில் தவறான ஒன்றைத் தேர்வு செய்க.

A)ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று

B)வேறுபெயர் மணநூல்

C)ஆசிரியர் திருத்தக்க தேவர்

D)ஆசிரியப்பாவால் ஆனது

E)விடை தெரியவில்லை

46. இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு என்ற நூலின் ஆசிரியர்.

A)மா.பொ.சி

B)கல்கி

C)மா.சு.அண்ணாமலை

D)கிருஷ்ணன் குமார தேவன்

E)விடை தெரியவில்லை

47. மரபுப் பிழையற்ற ஒன்றைத் தேர்வு செய்க.

A)கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்

B)இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேந்தனர்

C)கொடியிலுள்ள மலரை எடுத்து வா

D)நேற்று தென்றல் காற்று அடித்தது

E)விடை தெரியவில்லை

48. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

A)செல்வி + ஆடினாள் - உயிரீறு + உயிர் முதல்

B)பாலை + திணை - மெய்யீறு + மெய்முதல்

C)கோல் + ஆட்டம் - மெய்யீறு + உயிர்முதல்

D)மண் + சரிந்தது - மெய்யீறு + மெய்முதல்

E)விடை தெரியவில்லை

49. முத்துடைத்தாமம்- இலக்கணக் குறிப்பு அறிக.

A) இரண்டாம் வேற்றுமைத் தொகை

B) மூன்றாம் வேற்றுமைத் தொகை

C) ஐந்தாம் வேற்றுமைத் தொகை

D) ஏழாம் வேற்றுமைத் தொகை

E) விடை தெரியவில்லை

50. பொருத்துக:

| | |
|---|---|
| 1. அசும்பு | அ) காடு |
| 2. கான் | ஆ) மலர்கள் |
| 3. படலை | இ) நிலம் |
| 4. துணர் | ஈ) மாலை |

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | ஈ | இ |
| B) | இ | அ | ஈ | ஆ |
| C) | இ | ஈ | அ | ஆ |
| D) | அ | இ | ஈ | ஆ |

E) விடை தெரியவில்லை

51. கூற்று : பண்பாடு – என்பது மாந்தனது அகவுணர்வு வளர்ச்சியையும் சீர்மையையும் குறிப்பது.

காராணம் : நாகரிக வளர்ச்சிக்குப் பண்பாடு துணைபுரியும்; அதுபோலவே பண்பாட்டு வளர்ச்சிக்கு நாகரிகம் உறுதுணையாக இருக்கும்.

A) கூற்று சரி, காரணம் சரி மேலும் சரியாக பொருந்தியுள்ளது

B) கூற்று சரி, காரணம் சரி மேலும் சரியாக பொருந்தவில்லை

C) கூற்று தவறு, காரணம் சரி

D) கூற்று சரி, காரணம் தவறு.

E) விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 7

52. சங்க காலக் கல்வெட்டுக்களில் பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

A)திருப்பரங்குன்றம்

B)நாகமலை

C)ஆனைமலை

D)திருச்சி

E)விடை தெரியவில்லை

53. பொன், செம்பு ஆகிய உலோகத் தகடுகளின் மீது எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன அவற்றிற்கு ______ என்று பெயர்.

A)நாணயங்கள்

B)பட்டயங்கள்

C)நாணயங்கள் மற்றும் செப்பேடுகள்

D)பழங்கால ஓலைகள்

E)விடை தெரியவில்லை

54. தமிழகத்தில் ______ சமயத்தைச் சார்ந்தவர்கள் சங்கம் ஏற்படுத்திக் கல்வித் தொண்டும் சமயத் தொண்டும் புரிந்தார்கள்.

A)சமணம்

B)பௌத்தம்

C)ஆசிவகம்

D)வைணவம்

E)விடை தெரியவில்லை

55. சித்தன்னவாசல் குகை ஓவியம் அமைந்துள்ள தமிழக மாவட்டம்.

A)தஞ்சை

B)புதுக்கோட்டை

C)திருச்சி

D)திண்டுக்கல்

E)விடை தெரியவில்லை

56. பொருத்துக:

1. குறிஞ்சி அ) வைகறை
2. பாலை ஆ)எற்பாடு
3. மருதம் இ)மாலை
4. நெய்தல் ஈ)நண்பகல்
5. முல்லை உ)யாமம்

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| A) | உ | ஈ | அ | ஆ | இ |
| B) | இ | அ | ஈ | ஆ | உ |
| C) | உ | ஈ | அ | இ | ஆ |
| D) | ஈ | இ | அ | ஆ | உ |

E) விடை தெரியவில்லை

57. கூற்று : நாகரிகம் – என்பது மாந்தனது புறதோற்ற வளர்ச்சியின் செம்மையைக் குறிப்பது.

காரணம் : மாந்தன் தன் அறிவுத் திறனாலும் ஆற்றல் திறனாலும் உள்ளுணர்வுத் திறனாலும் பேணப்பட்டு வளர்ந்து வருவன, சுவையான உணவு – அழகான உடை – வசதியான உறையுள் போன்றவைகள்.

A)கூற்று காரணம் இரண்டும் சரி, மேலும் பொருந்தியுள்ளது.

B)கூற் காரணம் இரண்டும் தவறு.

C)கூற்று சரி, காரணம் தவறு.

D)கூற்று தவறு, காரணம் சரி.

E)விடை தெரியவில்லை

58. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயரிய தத்துவத்தை உலகிற்கு எடுத்துக் கூறிய பெருமை, சங்ககாலப் புலவர் ________ ஐச் சாரும்.

A)ஔவையார்

B)கபிலர்

C)நக்கீரர்

D)கணியன் பூங்கன்றனார்

E)விடை தெரியவில்லை

59. பொருத்துக:

1. பழனிமலை அ)பாரி

2. பறம்புமலை ஆ)காரி

3. மலையமான் நாடு இ)பேகன்

4. தகடூர் ஈ)அதியமான்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | இ | அ | ஆ | ஈ |
| C) | இ | ஆ | அ | ஈ |
| D) | ஆ | அ | இ | ஈ |

E) விடை தெரியவில்லை

60. காவிரி ஆற்றின் இரு பக்கங்களிலும் ஏராளமான கற்கோயில்களைக் கட்டியவர்.

A)இராஜ இராஜ சோழன்

B)பராந்த சோழன்

C)ஆதித்த சோழன்

D)கரிகாலன்

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 7

61. இந்திர விழா குறித்த கூற்றை ஆய்க.

1)மருத நிலக்கடவுள் இந்திரன்

2)வசந்த காலத்தின் – முழு நிலா நாளை இந்திர விழாவாகக் கொண்டாடி மகிழ்வர்.

3)பல மேடைகளில் இசையும் கூத்தும் நடைபெறும்

4)இவ்விழா சங்க காலத்தில் சிறந்திருந்தது.

A)அனைத்தும் சரி

B)அனைத்தும் தவறு

C)1 மற்றும் 2 மட்டும் சரி

D)3 மற்றும் 4 மட்டும் சரி

E)விடை தெரியவில்லை

62. ”சுதை என்பது சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு முதலியவற்றைக் கலந்து அரைத்து வச்சிரம் போல் செய்து அதைக் கொண்டு உருவங்கள் செய்வது” என ______ என்பவர் குறிப்பிடுகிறார்.

A)அ.தட்சிணாமூர்த்தி

B)மு.வ.

C)வெள்ளை வாரணனார்

D)புலவர் குழந்தை

E)விடை தெரியவில்லை

63. கீழ்காணும் கலைகளுள் நுண்கலை அல்லாதது எது?

A)கட்டடக் கலை

B)சிறபக்கலை

C)பரதக்கலை

D)ஓவியக்கலை

E)விடை தெரியவில்லை

64. தமிழர் தோற்றம் குறித்த கருதுகோள்களை கவனிக்க.

1)தமிழர் குமரிக்கண்டத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

2)தமிழர்கள் தென்னிந்தியாவின் பழங்குடிகள்.

3)ஆதியில் ஆப்பிரிக்காவில் இருந்து அரேபிய கடல் வழியாகத் தென் இந்தியா வந்தோரின் வழித்தோன்றல்கள்.

4)மத்திய ஆசிய, வட இந்தியா நிலப்பரப்புகளில் இருந்து காலப்போக்கில் தென் இந்தியா வந்தனர்.

தவறான ஒன்றைத் தேர்வு செய்க.

A)1 மட்டும் தவறு

B)2 மட்டும் தவறு

C)அனைத்தும் தவறு

D)தவறு ஏதுமில்லை

E) விடை தெரியவில்லை

65. முல்லை நிலக்கடவுள்.

A)மாயோன்

B)சேயோன்

C)வேந்தன்

D)வருணன்

E)விடை தெரியவில்லை

66. ”டார்க்த்தான் – 2022” என்ற சொல்லாடல் இதனுடன் தொடர்புடையது.

A)குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு

B)போதைப்பொருள் ஒழிப்பு

C)மதத் தீவிரவாத ஒழிப்பு

D)பெண் பாலியல் தொந்தரவு எதிர்ப்பு

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 7

67. 17-வது G-20 அரசுத் தலைவர்கள் மற்றும் அரசுகளின் உச்சி மாநாடானது _______ எனும் இடத்தில் இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது.

A)அமெரிக்காவின் - வாஷிங்கடன்

B)இந்தோனேஷியாவின் - பாலி

C)இலங்கையின் - கொழும்பு

D)இந்தியாவின் - மும்பை

E)விடை தெரியவில்லை

68. தமிழக அரசு அறிவித்துள்ள ஏழு அகழாய்வு இடங்களில் பொருந்தாத இணையைத் தேர்வு செய்க.

A)சிவகங்கை - கீழடி

B)தூத்துக்குடி - சிவகளை

C)அரியலூர் - கங்கை கொண்ட சோழபுரம்

D)விருதுநகர் - மணலூர்

E)விடை தெரியவில்லை

69. NIPER – என்பதன் விரிவாக்கம்.

A)தேசிய மருந்துக்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

B)தேசிய மருந்து ஏற்றுமதி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

C)தேசிய மருந்து கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

D)தேசிய ஆயுஷ் மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

E)விடை தெரியவில்லை

70. தேசிய மகளிர் ஆணையத்தின் 30 வது நிறுவன தினத்தின் கருத்துரு.

A)’She The Game Changer’

B)’She The Change Maker’

C)’She The Amazing Creator’

D)’She The Most Important Creature’

E)விடை தெரியவில்லை

71. காடுகளின் அதிகபட்ச விகிதம், அதாவது ஒரு மாநிலத்தின் புவியியல் பகுதியுடன் ஒப்பிடும்போது அதிக வனப்பரவலைக் கொண்ட பகுதிகளில் தவறான ஒன்றைத் தேர்வு செய்க.

A)மிசோரம் – 85%

B)அருணாச்சலப் பிரதேசம் – 79%

C)மேகாலயா – 76%

D)உத்திரப்பிரதேசம் – 74%

E)விடை தெரியவில்லை

72. இவ்வாண்டு _____ சம்பவத்தின் 100 ஆண்டுகள் நிறைவு ஒன்றிய அரசானது அனுசரித்தது.

A)ஒத்துழையாமை இயக்கம்

B)சௌரி சௌரா சம்பவம்

C)ஜாலியன் வாலாபாக் படுகொலை

D)மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம்

E)விடை தெரியவில்லை

73. திருநங்கைகள் மற்றும் பிச்சை எடுக்கும் செயலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு நலத் திட்டங்களை வழங்குவதற்காக ஒன்றிய அரசால் வடிவமைக்கப்பட்டுள்ள திட்டம்.

A)SMILE

B)VISSLE

C)BRAVE

D)VEER

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 7

74. அறிவியலாளர்கள் சமீபத்தில் 'ஹம்பர்டியம் கோவிடம்' என்ற ஒரு புதிய இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.

A) நாடாப் புழு

B) தட்டைப் புழு

C) மண்புழு

D) வாழைத் தண்டில் வாழும் ஒருவகை புழு

E) விடை தெரியவில்லை

75. 2021 ஆம் ஆண்டின் இளம் கணிதவியலாளர்களுக்கான இராமனுஜன் பரிசினை வென்றவர்.

A) பேராசிரியர் ரவீனா சாண்டிக்

B) பேராசிரியர் மல்லிகா கான்வே

C) பேராசிரியர் நீனா குப்தா

D) பேராசிரியர் கௌதம சச்சர்

E) விடை தெரியவில்லை

76. உலக புற்றுநோய் தினம் ____ அன்று அனுசரிக்கப்படுகிறது.

A) பிப்ரவரி - 02

B) பிப்ரவரி - 04

C) பிப்ரவரி - 06

D) பிப்ரவரி - 08

E) விடை தெரியவில்லை

77. 2022 – 2027 ஆம் நிதியாண்டிற்கான ______ என்ற புதிய திட்டத்திற்கு ஒன்றிய கல்வி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

A) வயது வந்தோருக்கான கல்வி சீரமைப்புத் திட்டம்

B) புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம்

C) பெண்களுக்கான கல்வியறிவுத் திட்டம்

D) இளம் குழந்தைகளுக்கான கல்வியறிவுத் திட்டம்

E) விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 7

78. இந்தியாவின் முதல் புல்லட் இரயில் திட்டமானது இந்த இரு நகரங்களுக்கு இடையில் அமையவுள்ளது.

A) சென்னை - டெல்லி

B) மும்பை – காந்திநகர்

C) சென்னை – கொல்கத்தா

D) மும்பை – அகமதாபாத்

E) விடை தெரியவில்லை

79. 2021-22 ஆம் ஆண்டின் பொருளாதார ஆய்வறிக்கையின் கருத்துரு.

A) "Inclusive Development"

B) "Doorway Of Wealth"

C) "Each One Meets Wealth"

D) "Agile Approach"

E) விடை தெரியவில்லை

80. "How to prevent the Next Pandemic' என்ற புத்தகமானது 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் வெளியாக உள்ளது. நூலின் ஆசிரியர்.

A) குட்டெரெஸ்

B) பைடன்

C) ஜெஃப்

D) பில்கேட்ஸ்

E) விடை தெரியவில்லை

81. ஒரு பெண், ஒரு சிறுவனைக் காண்பித்து " இவன் என்னுடைய தாத்தாவின் ஒரே மகனின் மகன்" ஆவார் எனக் கூறினாள் எனில், அந்தப் பெண், அச்சிறுவனுக்கு எவ்வகையில் உறவு?

A) சகோதரி


B) அம்மா

C) அத்தை

D) சின்ன அம்மா

E) விடை தெரியவில்லை

82. விடுபட்ட இடத்தை நிரப்புக.




*A)1*


*B)2*

*C)3*

*D)4*

*E)*விடை தெரியவில்லை

83. விடுபட்ட எண்ணைக் கண்டறிக.




*A)10*


*B)12*

*C)14*

*D)18*

*E)*விடை தெரியவில்லை

84. விடுபட்ட இடத்தில் வரவேண்டிய எண் யாது?




*A)144*

*B)148*

C)254

D)256

E)விடை தெரியவில்லை

85. ஒரு குடும்பத்தில் ஒரு குடும்பத் தலைவர், அவருடைய மனைவி, இரு மகன்கள் மற்று அவர்களுடைய மனைவிகள் உள்ளனர். ஒவ்வொரு மகனுக்கும் இரு மகள்கள் உள்ளனர். எனில், அக்குடும்பத்தில் உள்ள பெண்கள் எத்தனை பேர்?

A)5


B)3

C)6

D)7

E)விடை தெரியவில்லை

86. விடுபட்ட இடத்தைக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளில் சரியான ஒன்றைக் கொண்டு நிரப்புக.




A)27

B)37

C)24

D)34

E)விடை தெரியவில்லை

மாதிரித் தேர்வு - 7

87. ஒரு மிருகக் காட்சி சாலையில் மான்களும் மயில்களும் உள்ளன. தலைகளை எண்ணும்போது 80 வருகின்றது. அவற்றின் கால்களை எண்ணும்போது 200 வருகின்றது. எனில் அங்கு எத்தனை மயில் உள்ளன?

A)20


B)30

C)50

D)60

E)விடை தெரியவில்லை

88. விடுபட்ட இடத்தைக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளில் சரியான ஒன்றைக் கொண்டு நிரப்புக.




A)194

B)156


C)250

D)256

E)விடை தெரியவில்லை

89.

ஒரு பகடை மூன்று முறை உருட்டப்படும்போது தோன்றும் நிலைகள் படத்தில் காட்டப்பட்டுள்ளது. 2 என்ற எண்ணிற்கு எதிரே அமையும் எண் யாது?




A)5

B)1

C)4

D)3

*E)விடை தெரியவில்லை*

*90.*

ஒரு பகடை நான்கு முறை உருட்டப்படும்போது தோன்றும் நிலைகள் படத்தில் காட்டப்பட்டுள்ளது. 4 என்ற எண்ணிற்கு எதிரே அமையும் எண் யாது?




*A)1*

*B)2*

*C)3*

*D)5*

*E)விடை தெரியவில்லை*

*91.* *ஒருவன் முதல் நாளில் 3 ரூபாய் வருமானம் ஈட்டுகின்றான். ஒவ்வொரு மறுநாளும் அவனது வருமானமானது இரு மடங்காகிறது. எனில், அவன் 10வது நாளில் எவ்வளவு வருமானம் ஈட்டுவான்?*

*A)768*

*B)1536*

*C)3072*

*D)30*

*E)விடை தெரியவில்லை*

*92.* *11, 12, 20, 47, ? அடுத்த எண்ணைக் கண்டறிக.*

*A)110*

*B)111*

*C)201*

*D)211*

*E)விடை தெரியவில்லை*

மாதிரித் தேர்வு - 7

93. சர்வேஷ் தனது வீட்டிலிருந்து மேற்குத் திசையில் 3 கி.மீ. தூரம் சென்று பின்னர் தனது வலது புறம் திரும் 3 கி.மீ. தூரம் செல்கின்றார். பின்னர் மீண்டு வலதுபுறம் திரும் 7 கி.மீ. தூரம் பயணம் செய்து தனது பள்ளியை அடைகிறார். அவரின் வீட்டிற்கும் பள்ளிக் இடைப்பட்ட தொலைவு யாது?

A)7 கி.மீ.

B)5 கி.மீ.

C)10 கி.மீ.

D)13 கி.மீ.

E)விடை தெரியவில்லை

94. கிழக்கு திசையை நோக்கி நிற்கு ஒருவர், கடிகார திசையில் $45^0$ திரும்பு றார். மீண்டு அதே கடிகார திசையில் $180^0$ திரும்பி, பின்னர் கடிகார எதிர்திசையில் $270^0$ திரும்பு றார். இப்போது அவர் நோக்கும் திசை.

A)தெற்கு

B)வடகிழக்கு

C)தென்கிழக்கு

D)வடமேற்கு

E)விடை தெரியவில்லை

95. 19, 23, 29, 31, ?

A)33

B)37

C)41

D)43

E)விடை தெரியவில்லை

96. TYPIST : TYPE WRITTER :: WRITER : ?

A)PEN

B)BOOK

C)STORY

D)PAPER

E)விடை தெரியவில்லை

97. CDEF : FGHI :: KLMN : ?

A)NOPS

B)MNOP

C)NQPS

D)NOPQ

E)விடை தெரியவில்லை

98. 21, 39, 63, 83 மாறுபட்ட எண்ணைக் கண்டறிக.

A)21


B)39

C)63

D)83

E)விடை தெரியவில்லை

*99.*




*A)16*

*B)18*

*C)24*

*D)20*

*E)விடை தெரியவில்லை*

*100.* *If Z = 52 and CAT = 48 then BAT = ?*

*A)46*

*B)42*

*C)50*

*D)40*

*E)விடை தெரியவில்லை*